Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 66 ஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதாக் காரியத்தைக் சிந்திப்பானேன்? சங்.2:1 அக்டோபர் 2020 No.10

தேவ கோபம்

The wrath of God

Arthur W. Pink

தேவ கோபத்தை தாங்கள் ஒரு மன்னிப்புக் கோருவதால் சமாளித்து விடலாம் என்றும் அல்லது அப்படி ஒன்று இருக்கமுடியாது என்றும் கருதுகிற பேர்க்கிறிஸ்தவர்கள் இருப்பது துக்க மானது. இன்னும் சிலர் திறந்தமுகமாய் இப்படிக் கூறாவிட்டாலும் தெய்வீகத் தன்மையில் இது ஒரு பழுது என்று எண்ணுகிறார்கள். அவர்கள் இதைக் குறித்து கேட்க விருப்பமற்றவர்களாக வும் இதனை வெறுக்கிறவர்களாகவும் இருக்கின்றனர். சிலர் அவரது நற்குணத் திற்கு ஒத்துப்போகாதது என்று சிந்தித்து அந்த எண்ணத்தையே அகற்றி விடுவதுண்டு.

தேவன் இந்த உண்மையை மறைக்கவில்லை

தேவனுடைய கோபத்திலிருந்து தங்கள் பார்வையைத் திருப்புகிறவர்கள் தேவகோபம் என்பது தெய்வீகப் பண்பின் ஒரு குறைபாடு அல்லது தெய்வீக ஆட்சியின் களங்கம் என்ற நோக்கோடு பார்க்கிறார்கள். ஆனால் வேதவாக்கியங்கள் கூறுவதென்ன? தேவன் ஒருபோதும் தமது கோபத்தைக் குறித்த சத்தியத்தை மறைக்கவில்லை.

"நான் நானே அவர், என்னோடே வேறே தேவன் இல்லை என்பதை இப்பொழுது பாருங்கள்; நான் கொல்லு கிறேன்; நான் உயிர்ப்பிக்கிறேன், நான் காயப்படுத்துகிறேன்; நான் சொஸ்தப் படுத்துகிறேன்; என் கைக்குத் தப்புவிப் பார் இல்லை. நான் என் கரத்தை வானத் திற்கு நேராக உயர்த்தி, நான் என்றென் றைக்கும் ஜீவித்திருக்கிறவர் என்கிறேன். மின்னும் என் பட்டயத்தை நான் கருக்காக்கி, என் கையானது நியாயத் தைப் பிடித்துக் கொள்ளுமானால், என் சத்துருக்களிடத்தில் பழி வாங்கி, என்னைப் பகைக்கிறவர்களுக்குப் பதிலளிப்பேன்" உபா.32:39-41.

வேதவாக்கியங்களில் அவரது அன்பு உருக்கம் ஆகியவற்றைவிட அவரது கோபம், சினம், எரிச்சல் ஆகிய வையே அதிகமாகப் பதிவுசெய்யப் பட்டுள்ளன. தேவன் பரிசுத்தமானவர், அவர் பாவத்தை வெறுப்பதால் அவரது கோபம் பாவிகளுக்கு எதிராகப் பற்றி எரிகிறது சங்.7:11.

தேவனுடைய கோபம் அவரது உத்தமம், வல்லமை அல்லது இரக்கம் ஆகியவற்றைப் போலவே அவரது தெய்வீக பரிபூரணத்தை வெளிப்படுத்து கிறது. எனவே அதனால் எந்த பழுதோ எந்தச் சிறிய அளவிலான குறைபாடோ தேவனுடைய பண்பில் ஏற்பட முடியாது. ஆனால் கோபம் வெளிப்படா விட்டால் பாவத்தைக் குறித்த நிர்விசாரம் ஏற்பட்டு பழுதை ஏற்படுத்திவிடும். தேவன் பாவத்தை வெறுக்கிறவர். அனைத்து உயரிய பண்புகளையும் கொண்ட அவர் நன்மையையும் தீமை யையும், ஞானத்தையும் குறையையும் சமமான திருப்தியுடன் பார்க்கமுடியுமா? முற்றிலும் பரிசுத்தமானவர் பாவத்தை உதாசீனம் பண்ணி அதைக் கடுமையாகத் தண்டியாமல் இருக்கமுடியுமா? ரோ.11:22 படிக்கலாம். பரிசுத்தமும், அழகும் உள்ளவைகளை மட்டும் விரும்புகிறவர் அசுத்தமானவைகளையும் இழிவானவை களையும் வெறுப்பதும் அருவருப்பதும் நிஜம்தானே. எனவே தேவனுடைய இயற்கை நன்மை செய்பவர்களுக்கு பரலோகத்தையும் தீமை செய்பவர்களை எரிநரகத்துக்கு அனுப்புவதும் நியாயம் தான்.

தேவனுடைய கோபம் அனைத்து அநீதிக்கும் கொடுக்கப்படும் நித்திய தடுப்புக்காவல். அது தீமைக்கு எதிரான தெய்வீக நீதிக்கு ஒத்த வெறுப்பையும் கோபத்தையும் காண் பிக்கிறது. பாவத்திற்கு எதிராக பரிசுத்த தேவனுடைய தூண்டிவிடப்பட்ட செயல். தீமை செய்கிறவர்களுக்கு எதிராக நியாயவிதி, தேவனுடைய அதிகாரத்திற்கு எதிரான புரட்சியாகப் பாவம் இருப்பதால் தேவனுடைய கோபம் எழும்புகிறது. அவருடைய சர்வாதிகாரத்திற்கு எதிரான தவறுதான் பாவம். தேவனுடைய அதிகாரத்துக்கு எதிராக நிற்பவர்கள் அவர் கர்த்தர் என்பதை அறியவேண்டும். அவர்கள் பகைத்த அவர் எவ்வளவு மகத்துவ மானவர் எனக் கண்டு கொள்ள வேண்டும். அவர்கள் அற்பமா யெண்ணியது எவ்வளவு கோபத்தைத் தூண்டுகிறது என்று அறியவேண்டும். விழுந்துபோன தூதன் தண்டிக்கப் படுவதும் அவசியம். ஆனால் தேவன் பழிவாங்குபவரல்ல. அகிலாண்டத்தைத் தமக்கு சொந்தமாக்கிக் கொள்வார்.

குறிப்பிடப்பட்ட பகுதியி லிருந்து தேவனுடைய தெய்வீக கோபம் அவரது பரிபூரணத்தை வெளிப்படுத்து கிறது. மேலும் தேவனுடைய வசனமும் இதை உறுதிப்படுத்துகிறது. "சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக் கும் அநியாயத்துக்கும் விரோதமாய் தேவகோபம் வானத்திலிருந்து வெளிப் படுத்தப்பட்டிருக்கிறது" ரோமர் 1:18.

மேற்கூறிய வசனத்தை ராபர்ட் ஹால்டேன் என்பவர் இவ்வாறு விளக்கு கிறார். "ஏதேன் தோட்டத்தில் முதலாவது மரணம் அறிவிக்கப்பட்டதும், பூமி சபிக்கப்பட்டதும், மனிதன் பரதீசி லிருந்து விரட்டப்பட்டதும் தொடர்ந்து ஜலப்பிரளயம், அக்கினியால் பட்டணங் களின் அழிவு போன்றவற்றோடு முக்கிய மாக உலகம் முழுவதற்குமான மரணமும் தேவகோபமாக வெளிப்படுத்தப் பட்டுள்ளன. முற்காலத்தில் மீறப்பட்ட நியாயப்பிரமாண சட்டங்களுக்கு பலிகள் செலுத்தப்பட்டன. ரோமருக்கு எழுதப்பட்ட நிருபத்தின் 8-ம் அதிகாரத் தில் பரி.பவுல் விசுவாசிகளின் கவனத் திற்கு கொண்டு வரும் உண்மை சகல சிருஷ்டியும் மாயைக்குக் கீழ் இருப்ப தால் தவித்து ஏகமாய்ப் பிரசவ வேதனைப்படுவதாகக் குறிப்பிடுகிறார். ஒரு தேவன் உண்டென்று வெளிப் படுத்தி அவருடைய மகிமையை பிரகடனப்படுத்திவரும் சிருஷ்டி அவர் பாவத்திற்கு விரோதி என்றும் அவர்களது அக்கிரமங்களுக்குப் பழி வாங்குகிறவர் என்றும் நிரூபிக்கிறது."

"ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக தேவகுமாரன் பரத்திலிருந்து இறங்கிவந்து தமது தெய்வீகப் பண் பினை வெளிக்காட்டிய போதும், அவரது பாடு மரணம் மூலமாக துன்புற்ற போது தேவனுடைய கோபம் பாவத்திற்கு எதிராக வெளிப்படுத்தப்பட்டது. அதோடு எதிர்காலத்தில் பொல்லாதவர் கள் நித்தியமாக தண்டிக்கப்படுவதும் பிரகடனம் செய்யப்படுகிறது. இந்த நிர்வாகத்தின்படி பரலோகம் இரு வெளிப்பாடுகளை அளித்துள்ளது: ஒன்று தேவனுடைய கோபம், மற்றொன்று அவருடைய கிருபை.

மேலும் சங்.95:11-ல் குறிப்பிட்ட படி தேவ கோபம் தெய்வீக பரிபூரணத் தை வெளிப்படுத்துகிறது. "என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப் பதில்லையென்று, என்னுடைய கோபத் திலே ஆணையிட்டேன்." இரண்டு சந்தர்ப்பங்களில் தேவன் ஆணை

(4-ம் பக்கம் பார்க்க)

முக்கிய குறிப்பு

ஒவ்வொரு மாதமும் 10-ம் தியதிக்குள் பத்திரிகை வரத் தவறினால் உடனே எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்

மொபைல் : 95432 21008

வாட்ஸ்ஆப் : 94897 40295

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

இம்மாத சிந்தனை

கழுகு

கழுகு தனது குஞ்சுகளுக்குப் பயிற்சி அளிக்கும் காலம் அந்த குஞ்சுகளுக்கு சோதனையும் வேதனையும் நிறைந்த காலம் தான்.

ஏன் இந்த பயிற்சி? தங்களை போன்று தங்கள் குஞ்சுகளும் மிக உயரப் பறக்க வேண்டும்; பெரும் புயலை எதிர்க்கும் ஆற்றலைப் பெற வேண்டும்; செட்டைகளை அடிக்காமலே ஒரு கண்டம் விட்டு இன்னொரு கண்டத்திற்குச் செல்ல வேண்டும் என்று தாய்க்கழுகு நினைப்பதினால் அல்லவா?

வாக்குத்தத்தம்

உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலது கையைப் பிடித்து : பயப்படாதே, நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று சொல்லுகிறேன் ஏசாயா 41:13.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2020 அக்டோபர் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன். **முதலாவது** வாசகர் கடிதங்கள் சிலவற்றை வெளியிடுகிறேன்:

18.08.2020

பிரியமுள்ள சகோதரர் அவர்களுக்கு எழுதுவது, தங்கள் பத்திரிகை மாதந்தோறும் வந்துவிடும். பத்திரிகை ஆவிக்குரிய விஷயங்களை வெளிப்படுத்துவதாக இருக்கும். எங்களுக்கு திருமணம் ஆகி இந்த மாதத்தில் 42 வருடங்கள் ஆகிறது. எங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். மகன், மருமகள், பேரப்பிள்ளைகளுக்கு வேண்டிக் கொள்ளுங்கள். தங்கள் பத்திரிகை ஊழியத்திற்காக இந்த சிறு தொகையை அனுப்பி உள்ளேன். தங்களுக்காகவும் எங்கள் குடும்ப ஜெபத்தில் வேண்டிக் கொள்கிறோம்.

சகோதரி A.M., சென்னை

* * * * *

13.08.2020

Dear brother in Christ,

Thanks a lot for sending me Varukayin Thoothan regularly inspite of the difficult situations.

Herewith I am sending Rs.500/- subscription for 2 yrs 2020-2022.

May God bless your ministry. Thanking You.

Yours Sincerely
சகோதரி A.A., சென்னை

Encl. : Canara Bank Cheque Rs.500 Dt. 14.08.2020

* * * * *

Praise the Lord

01.08.2020

Dear Bro in Christ,

கர்த்தருடைய காருண்யத்தால் குடும்பத்தினர் அனைவரும் சுகமாயிருக்கிறோம். ஜீலை மாத தூதனுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். பஞ்சம், மரணம், ஆத்மா பற்றி எழுதியிருந்தீர்கள். கர்த்தர் நாமம் மகிமைப்படுவதாக. எனது சகோதரி தனக்கு காணிக்கை அனுப்ப வசதியில்லாததடியால் என்னை தங்கள் ஊழியத்திற்கு ரூ.2000 அனுப்பி வைக்கும்படி எழுதிக் கேட்டுக்கொண்டாள். ஆகையால் நான் தங்கள் உபவாச ஊழியத்திற்கு ரூ.1000-மும் சேர்த்து ரூ.3000 Cheque அனுப்பியுள்ளேன். கர்த்தர் ஊழியத்தின் தேவைகளை சந்திப்பாராக. மற்றும் எங்கள் குடும்பம், சகோதரி குடும்பத்திற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

Sister in Christ,
M.S., Trichy -21

Encl. : I.O.B Cheque - Rs.3000 Cheque No. - 552110

* * * * *

இரண்டாவதாக கொடுப்பதைக் குறித்து வேதம் கூறுவதை எழுதுகிறேன் :

1. உற்சாகமாய்

கர்த்தர் மோசேயை நோக்கி :

இஸ்ரவேலர் புத்திரர் எனக்குக் காணிக்கையைக் கொண்டு வரும்படி அவர்களுக்குச் சொல்லு; மனப்பூர்வமாய் **உற்சாகத்துடன்** கொடுப்பவன் எவனோ அவனிடத்தில் எனக்குக் காணிக்கையை வாங்குவீர்களாக யாத்.25:1,2.

2. மனப்பூர்வமாய்

இப்படி **மனப்பூர்வமாய்க்** கொடுத்ததற்காக ஜனங்கள் சந்தோஷப்பட்டார்கள்; உத்தம இருதயத்தோடே உற்சாகமாய்க் கர்த்தருக்குக் கொடுத்தார்கள்.

இப்படி மனப்பூர்வமாய் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம்.

என் தேவனே, நீர் இருதயத்தைச் சோதித்து, உத்தம குணத்தில் பிரியமாயிருக்கிறீர் என்பதை அறிவேன்; இவையெல்லாம் நான் உத்தம இருதயத்தோடே மனப்பூர்வமாய்க் கொடுத்தேன்; இப்பொழுது இங்கேயிருக்கிற உம்முடைய ஜனமும் உமக்கு மனப்பூர்வமாய்க் கொடுக்கிறதைக் கண்டு சந்தோஷித்தேன் 1 நாளாகமம் 29:9, 14, 17.

3. உதாரத்துவமாய்

அன்றியும் சகோதரரே, மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்குத் தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறேன்.

அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும் தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த **உதாரத்துவமாய்க்** கொடுத்தார்கள்.

மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு நான் சாட்சியாயிருக்கிறேன் 2 கொரிந்தியர் 8:1-3.

மூன்றாவதாக "நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்ச காலந்தோன்றியப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே.

ஆகையால் : ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், "(யாக்கோபு 4:14,15) இம்மாதம் முதல் **புதிய முகவரி பட்டியல்** (New Address List) தயாரிக்கிறோம்.

தமிழ்நாடு எங்கும் முழு இரவு ஜெப ஊழியம் செய்கிற ஒரு அருமை தாயார் அநேக ஆண்டுகளுக்கு முன்னால் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது **"தூதனின் ஒவ்வொரு கட்டுரையும் படித்து முடிக்கும் போது ஒரு பிரசங்கம் கேட்டது போலிருக்கும்"** என்றார்கள். அந்த தாயார் அவர்களது ஆகஸ்ட் 2020 மாத பத்திரிகையில் இவ்வாறு எழுதியிருக்கிறார்கள் :

"இந்த கொரோனா காலங்களிலும் தபால் நிலையம் சென்று மணியாடர், செக் மூலம் காணிக்கை அனுப்புகிற வர்களுக்காக, நேரடியாக வங்கிக் கணக்கில் காணிக்கை அனுப்புகிறவர்களையும் என் தேவன் விசேஷ விதமாய் ஆசீர்வதிக்க ஜெபிக்கிறேன். **இப்பத்திரிகை வாசிக்கின்ற ஒவ்வொருவரும்** மாதம் மாதம் குறைந்த காணிக்கையாக இருந்தாலும் அனுப்ப முயற்சி செய்யுங்கள். நாட்கள் குறைவாக உள்ளன. கர்த்தரின் வருகை சமீபமாய் உள்ளது."

* * * * *

(3-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்க தொடர்ச்சி)

எனக்கு அருமையான தேவனுடைய பிள்ளைகளே, சில ஆண்டுகளுக்கு முன்னால் நாம் தபால் சலுகையை இழந்தோம். நம்மைப் போல தபால் சலுகையை இழந்தவர்கள் படும் பாடுகளை கடந்த நாட்களில் சுருக்கமாக எழுதியிருந்தேன். மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் சந்தா ரூ.100 என்று நாம் அச்சிட்ட நாட்களிலேயே அருமையான தேவனுடைய பிள்ளைகளில் சிலர், வருட இறுதியில் ஐயா, சந்தாவும் காணிக்கையுமாக ரூபாய் 500 அனுப்பியிருக்கிறேன்; சந்தாவும் காணிக்கையுமாக ரூபாய் 1000 அனுப்பியிருக்கிறேன்; ஐயா, ரூபாய் 2000 அனுப்பியிருக்கிறேன், சந்தா போக பாக்கியை ஊழியத்திற்கு உபயோகித்துக் கொள்ளுங்கள் என்று எழுதி அனுப்பியிருந்தார்கள்.

வருகையின் தூதன் ஊழியத்தின் மாத தேவைகள்

1. அலுவலக ஊழியர்கள் அலவன்ஸ் (Allowance)
2. காகிதம் (Paper cost)
3. அச்சுக்கூலி (Printing Charges)
4. அனுப்புவதற்காக கட்டும் கூலி (Despatching Charges)
5. தபால் செலவுகள் (Postages & Courier Expenses)
6. மின்சாரம், தண்ணீர், பெட்ரோல், அலுவலக பொருட்கள், தொலைபேசி கட்டணங்கள்
7. கட்டடம், கம்ப்யூட்டர்கள், வாகனங்கள் பராமரிப்பு மற்றும் வரிகள்

இதற்கு முன்னமே சிலமுறை எழுதினதையே திரும்பவும் எழுதுகிறேன்.

1. **எல்லா ஊழியங்களை போல வருகையின் தூதன் ஊழியங்களுக்காகவும் தினந்தோறும் ஜெபியுங்கள், மாதந்தோறும் தாங்குங்கள்.**
2. **வருடத்திற்கு ஒரு முறை மாத்திரம் காணிக்கை அனுப்புகிற தேவனுடைய பிள்ளைகள் குறைந்த பட்சம் ரூபாய் 500 அனுப்பும்படி அதிக அன்பாய் கேட்கிறேன்.**
3. **பிறந்த நாள், திருமண நாள் இன்னும் விசேஷ காரியங்களுக்காக காணிக்கை அனுப்புகிறவர்கள், வழக்கம் போல் அனுப்பி ஆண்டவரின் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையாய் கேட்கிறேன்.**

ஒரு அன்பு சகோதரி மாதந்தோறும் தூதன் ஊழியத்திற்கு ரூபாய் 100 மணியாடர் அனுப்பிக் கொண்டிருந்தார்கள். ஒருவேளை மாதந்தோறும் அனுப்புவது அவர்களுக்கு சிரமமாயிருந்திருக்கலாம்; எனவே வருட ஆரம்பத்திலேயே ரூபாய் 1200 மணியாடர் அனுப்ப ஆரம்பித்தார்கள், இப்பொழுது வங்கி வழியாக அனுப்புகிறார்கள்.

ஒரு அன்பு சகோதரன் அநேக வருடங்களாக மாதந்தோறும் ரூபாய் 50 அனுப்பி வந்தார்கள். கடந்த ஆண்டு முழுவதும் அவர்கள் அனுப்பவில்லை. இந்த ஆண்டு ஜீலை மாதம் ரூபாய் 600 மணியாடர் அனுப்பியிருந்தார்கள்.

1. **கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்.**

2. **அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்;**

3. கவனியுங்கள் : **நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கு அளக்கப்படும்** லூக்கா. 6:38

எழுப்புதல்

(சென்ற மாத தொடர்ச்சி)

எழுப்புதல் எழுப்புதல் என்று கத்துகிறோம்!

எழுப்புதல் எழுப்புதல் என்று எழுதி தீர்க்கிறோம்!

முட்டி தேய ஜெபிக்கிறோம்!

ஆனால் எழுப்புதலோ வந்த பாடில்லை!

என்று எழுதியிருக்கிறார் ஒரு தேவ மனிதர்.

எழுப்புதல் என்றால் என்ன?

கடந்த மாதம் எழுதியிருக்கிறதை சற்று விளக்கமாக எழுதுகிறேன்.

1. தேவன் இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியைகளைச் செய்வதால், ஒரு தேசமே தேவனுக்கு நேராக திரும்புவது 1 இராஜா.18:28, 29.
2. ஒரு பெரிய பட்டணமே தேவனை விசுவாசித்து, உபவாசித்து, இரட்டுடுத்தி, சாம்பலில் உட்கார்ந்து, தம்தம் பொல்லாத வழியை விட்டு திரும்புவது யோனா.3.
3. மகா பெரிய சபை பாவத்திற்காக மனஸ்தாபப்பட்டு மிகவும் அழுவது எஸ்றா.10:1.
4. தேவன் வானங்களைக் கிழித்திறங்குவது ஏசாயா 64:1,2.
5. உலர்ந்த எலும்புகள் உயிரடைவது எசேக்.37.
6. சீஷர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவது அப்.2:4; 4:31; 10:44-46.
7. திரளான மக்கள் இரட்சிக்கப்படுவது அப்.2:41; 4:4; 5:14.

ஒரு தேவ மனிதர் இவ்வாறு எழுதியிருக்கிறார் : "பரிசுத்த ஆவியின் அக்கினியை சபை இழந்துவிட்டதினால் தான் மனிதர் பாதாள அக்கினிக்குச் செல்லுகின்றனர்!" இம்மாதம் 7 விதமான அக்கினியை குறித்து எழுதுகிறேன்.

7 விதமான அக்கினி
7 Kinds of Fire

1. முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி
Fire out of the midst of a bush

அங்கே கர்த்தருடையதூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜ்வாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார். அப்பொழுது அவன் உற்றுப் பார்த்தான்; முட்செடி அக்கினியால் ஜ்வாலித்து எரிந்தும், அது வெந்து போகாமல் இருந்தது.

அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டார். முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி : மோசே, மோசே என்று கூப்பிட்டார், அவன் : இதோ, அடியேன் என்றான் யாத்.3:2, 4.

நமக்கு மிகவும் பழக்கமான இந்த வேதபாகம் மூலம் தேவன் தமது ஜனத்தை இரட்சிக்கிறதற்காக மோசேயை அழைத்தார் என்று அறிவோம்.

அப்பொழுது மோசே தேவனை நோக்கி : ..... நான் எம்மாத்திரம் என்றான் யாத்.3:11.

அப்பொழுது மோசே : அவர்கள் என்னை நம்பார்கள்; என் வாக்குக்குச் செவிகொடார்கள்; கர்த்தர் உனக்குத் தரிசனமாகவில்லை என்று சொல்லுவார்கள் என்றான்.

அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி : ஆண்டவரே, இதற்கு முன்னாவது, தேவரீர் உமது அடியேனோடே பேசினதற்குப் பின்னாவது தான் வாக்கு வல்லவன் அல்ல; நான் திக்குவாயும் மந்த நாவும் உள்ளவன் என்றான்.

அதற்கு அவன் : ஆண்டவரே, நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும் என்றான் யாத்.4:1,10,13.

எத்தனை சாக்குப்போக்குகள் சொல்லுகிறான் பாருங்கள். பின்பு : யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான் : இதோ, அடியேன் இருக்கிறேன் ; என்னை அனுப்பும் என்றேன் ஏசாயா 6:8.

நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன் எசேக்.22:30.

திறப்பிலே நிற்பது எல்லோருமே செய்யக்கூடிய ஒரு வேலைதானே, Are you ready? நீங்கள் ஆயத்தமா?

தன்னை முழுவதுமாக ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்த ஒரு மனிதனைக் கொண்டு தேவன் எவ்வளவு பெரிய காரியங்களைச் செய்யக்கூடும் என்பதை உலகம் இன்னமும் காணவில்லை என்றார் வில்லியம் கேரி.

இன்னொருவர் இவ்வாறு எழுதியிருக்கிறார் : வீடு முழுவதும் நாட்காட்டிகளையும் வசனங்களையும் தொங்கவிடுவதற்குப் பதிலாக உலகப்படம் ஒன்றை மாட்டுங்கள். நற்செய்தி எட்டியிராத பகுதிகளுக்கு வண்ணமிடுங்கள். இந்தப் படத்திற்கு முன்பாக நின்று பார்க்கும்போது, ஆண்டவர் உங்கள் இருதயத்தில் ஒரு பாரத்தைத் தீக் கொளுத்திடுவார். அதுதானே வில்லியம்

(7-ம் பக்கம் பார்க்க)

(1-ம் பக்க தொடர்ச்சி)

யிடுகிறார் : ஒன்று வாக்குப்பண்ணும் போது - ஆதி.22:16, இன்னொன்று நியாயத்தீர்ப்பைப் பிரகடனம் செய்யும் போது - உபா.1:34. முதலாவது பகுதி தமது பிள்ளைகளுக்கு இரக்கத்தைக் காண்பிப்பதையும் பின்பகுதி முறுமுறுக் கிற அவிசுவாச பொல்லாத ஜனங்களுக்கு அவர்களது சுதந்தரத்தை எடுத்துப் போடுவதையும் காண்பிக்கிறது. ஆணை யென்பது "உறுதி பண்ணும்படிக்கு ஆணையிடுதலே சகல விவாதத்திற்கும் முடிவு" என்று எபி.6:16 குறிப்பிடுகிறது. "என் பேரில் ஆணையிட்டேன்" ஆதி. 22:18-ல் தேவன் கூறியிருக்கிறார். சங்.89:35-ல் "ஒருவிசை என் பரிசுத்தத்தின் பேரில் ஆணையிட்டேன்" என்று உறுதிபட கூறுகிறார்.இவ்வாறு மகத்துவமுள்ள யெகோவா அவரது பரிசுத்தத்திற்கு இணையாக 'கோபம்' ஒரு பரிபூரணம் என வெளிப்படுத்துகிறார். எனவே தமது பரிசுத்தத்திலும், கோபத்திலும் ஆணை யிடுகிறார். மேலும் "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரபிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது" கொலோ.2:9 குறிப்பிடுகிறது. அவரது தெய்வீக பரிபூரணமெல்லாம் யோவான் 1:18-ல் அவரால் வெளிப்படுத்தப் பட்டதை வாசிக்கிறோம். "அவரது கோபாக்கினையின் மகா நாள் வந்து விட்டது" வெளி.6:17.

தேவகோபத்தைப் பிரதிபலிப்பதின் முக்கியத்துவம்

தேவகோபம் என்பது தெய்வீக குணாதிசயத்தின் பரிபூரணமாயிருப்ப தால் அதனைக் குறித்து அடிக்கடி தியானிப்பது அவசியம். முதலாவது நமது இருதயங்கள் தேவனுக்கு பாவத்தின் மேலுள்ள வெறுப்பை சரியான அளவில் உணர்த்தப்பட வேண்டும். பாவத்தை எளிதாக எடுத்துக் கொள்வதும் அதன் கொடூரத்தை மேற்பூச்சாக மட்டும் பார்ப்பதும், பல சாக்குப்போக்குகளைச் சொல்வதும் மனித தன்மையாக இருக் கிறது. பாவத்தின் மீதுள்ள தேவனுடைய வெறுப்பை அவரது பழிவாங்குதலையும் நாம் படிக்கப்படிக்க நாம் அதன் கொடிய தன்மையை நாம் உணர முடியும். இரண்டாவதாக தேவகோபம் நமது ஆத்துமாக்களில் உண்மையான தேவ பயத்தை உருவாக்குகிறது. "ஆதலால் அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிற வர்களாகிய நாம் பயத்தோடும் பக்தி யோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம். நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக் கிறாரே" எபி.12:28-29. தேவனுக்கு போதுமான கனத்தைக் கொடாமலும் அவரது நீதியின் கோபத்தைக் குறித்த தெய்வ பயமில்லாமலும் நாமிருந்தால் அவருக்குப் பிரியமாக சேவை நாம் செய்ய முடியாது. அதற்காக அவர் பட்சிக்கிற அக்கினி என்பதை அடிக்கடி மனதில் கொண்டு வர வேண்டும். மூன்றாவதாக நாம் வரப்போகிற கோபத்திலிருந்து விடுவிக்கப்பட்டதற் காக நமது ஆத்துமாக்கள் அவரை ஊக்கமாக ஜெபிக்க எழுப்பப்பட வேண்டும் 1 தெச.1:10.

தேவகோபத்தைக் குறித்த தியானத்தின் விழிப்புணர்வா அல்லது உதாசீனமா என்பது, அவருக்கு நேராக நமது இருதயத்தின் உண்மையான மனப்போங்கின் பரிசோதனையாயிருக் கிறது. நாம் தேவனது தன்மையாலும் அவரது நித்திய பரிபூரணத்தாலும் மகிழ்ச்சி கொள்ளாவிட்டால் தேவ அன்பு நம்மில் எப்படி வாசம் செய்ய முடியும்? நாம் அதிக ஜெபத்தோடு நமது எண்ணங்களில் தேவனைக் குறித்த தவறான கருத்துகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நமது ஆண்டவர் இப்படிக் கூறியிருக்கிறார் : "இவை களை நீ செய்யும்போது நான் மவுனமா யிருந்தேன். உன்னைப் போல் நானும் இருப்பேன் என்று நினைவு கொண் டாய்" சங்.50:21.

தேவகோபத்தின் மூலம் அவரது நீதி நிலை நிறுத்தப்படுகிறது. "ஜாதிகளே (புறஜாதிகள்) அவருடைய ஜனங்க ளோடே கூடக் களிகூருங்கள். அவர் தமது ஊழியக்காரரின் இரத்தத்திற்குப் பழிவாங்கி, தம்முடைய சத்துருக் களுக்குப் பதிலளித்தார்" உபா.32:43.

இவைகளுக்குப் பின்பு பரலோ கத்தில் திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன். அவர்கள் அல்லேலூயா, இரட்சணியமும் மகிமை யும் கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது; அவருடைய நியாயத்தீர்ப்புகள் சத்திய மும் நீதியுமானவைகள். தன் வேசித் தனத்தினால் பூமியைக் கெடுத்த மகா வேசிக்கு அவர் நியாயத்தீர்ப்புக் கொடுத்து தம்முடைய ஊழியக்காரரின் இரத்தத்திற்காக அவளிடத்தில் பழி வாங்கினாரே என்றார்கள். மறுபடியும் அவர்கள் அல்லேலூயா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள்" வெளி.19:1-3.

கர்த்தர் தமது மகத்துவத்தை நிரூபித்து, தமது ராஜ்யத்தை ஸ்தாபித்து, தமது நீதியை விளங்கப் பண்ணும்போது, அவரை எதிர்த்த பெருமையான புரட்சி யாளர்களும் தூக்கி எறியப்படுவார்கள். அப்போது பரிசுத்தவான்களின் களி கூருதல் அதிகமாயிருக்கும்.

"கர்த்தாவே, நீர் அக்கிரமங் களைக் கவனித்திருப்பீரானால் யார் நிலைநிற்பான் ஆண்டவரே" சங்.130:3. இந்தக் கேள்வியை நாம் ஒவ்வொருவரும் நம்மிடம் கேட்போம். ஏனெனில், சங்.1:5-ல் "துன்மார்க்கர் நியாயத்தீர்ப்பில் நிலைநிற்பதில்லை" என்று எழுதப்பட்டி ருக்கிறது. மக்களுடைய பாவங்களுக்காக திகிலடையவும் வியாகுலப்படவும் செய்தார் மாற். 14:33. அவர் அடைந்த வேதனை, வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் விழுந்தது, பலத்த சத்தம், கண்ணீரின் விண்ணப்பம் வேண்டுதல் ஆகியவற்றை எபி.5:7-ல் படிக்கிறோம். "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று கதறி ஜெபித்ததை மாற்.15:34 கூறுகிறது. இவை எல்லாவற்றின் மூலம் அக்கிரமங்களின் அடையாளங்கள் காண்பிக்கப்படுகின்றன. தேவ கோபத் தின் பாரத்தில் தேவகுமாரன் இப்படி நடுங்கினால் பாவிகளாகிய நாம் எப்படி நிற்கமுடியும்! கிறிஸ்துவாகிய ஒரே இரட்சகரிடம் மட்டுமே யோர்தான் புரண்டுவரும்போது அடைக்கலம் பெற முடியும்.

பெரும்பான்மையான மனித ரால் அவரது நற்குணம் நிந்திக்கப்படு கிறது. ஆனால் இந்த உலகின் மிகப்பெரிய அதிசயம் என்னவென்றால் : அவரது பொறுமையும் தயாளமும் நன்றிகெட்ட உலகுக்கு காண்பிக்கப்பட்டதே. ஒரு பட்டணத்திற்குள்ளே ஒரு எதிரி கண்டு பிடிக்கப்பட்டால் பட்டணத்து அதிகாரி அவனை முற்றுகையிட்டு அவனுக்கு உணவு கிடைக்காமல் செய்வான். ஆனால் நமது மகாப்பெரிய தேவன் அழிவுக்குரிய எதிரிகளின் அனுதின தேவைகளை சந்திப்பது ஆச்சரியமே! அவர் சபிக்கிறவர்களை ஆசீர்வதிக்கவும் துரோகிகளுக்கும் நன்றி கெட்டவர்களுக் கும் நன்மை செய்யவும் கட்டளை யிட்டிருக்கிறாரே. ஆனால் இவைகளால் தப்பிக்கொள்ள முயற்சிக்க வேண்டாம். தேவனது அரைக்கும் எந்திரம் மெது வானது, ஆனால் அது மிக நுண்ணியதாக அரைக்கக்கூடியது. அதுபோல தேவனது பொறுமையும் தயாளமும் இப்போது எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவு அதிகமாக தடுக்கமுடியாத பயங்கர கோபம் அவரது நற்குணங்களை உதாசீனப்படுத்துகிறவர்கள் மீது ஏற்படும். அமைதலான கடலில் புயல் ஏற்படும் போது அதன் முன் நிற்க முடியாது. அதுபோல பொறுமையும் நற்குணமும் தேவன் இனிமையானவர் என்றும் அவரது கோபம் எழும்பினால் அவர் பட்சிக்கிற அக்கினி என்று William Gurnall குறிப்பிட்டுள்ளார்.

எனவே வருங்கோபத்திற்குத் தப்பிக்கொள்ள கிறிஸ்துவிடம் ஓடிச் செல்லுங்கள் மத்.3:7. காலதாமதம் வேண்டாம். உங்களிடம் நான் அன்பு டன் வேண்டிக்கொள்வது என்னவென் றால் இந்த செய்தி வேறு யாருக்குமல்ல, உங்களுக்கே உரியது என்பதுதான். இயேசுவிடம் வந்துவிட்டேன் என்று திருப்தி கொள்ள வேண்டாம். அதை உறுதி செய்து கொள்ளுங்கள். தேவன் உங்கள் இருதயங்களை ஆராய்ந்து உங்களுக்கு வெளிப்படுத்தும்படி வேண்டிக் கொள்ளுங்கள்.

பிரசங்கிக்கிறவர்களுக்கு ஒரு வார்த்தை

சகோதரனே! தேவனுடைய கோபத்தைக் குறித்து உங்கள் ஊழியத் தில் அதிகமாக எடுத்துரைக்கிறீர்களா? பழைய ஏற்பாட்டின் காலத்தில் தீர்க்கர் இஸ்ரவேல் மக்களிடம் அவர்களது பொல்லாத வழிகள் தேவனுடைய கோபத்தை தூண்டியதையும் கோபாக் கினை நாளுக்காக சேமித்து வைப்பதை யும் அடிக்கடி கூறினார்கள். அன்றைய நாட்களை விட உலகத்தின் நாட்கள் நன்றாகவில்லை. "தேவன் நீதியுள்ள

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

நியாயாதிபதி; அவர் நாள்தோறும் பாவியின்மேல் சினங் கொள்ளுகிற தேவன்" சங்.7:11 மக்களுக் குக் கூறப்பட வேண்டும். கிறிஸ்துவின் முன்தூதனாகிய யோவான் ஸ்நாபகன் 'வருங்கோபத் துக்குத்' தப்பிக்கொள்ள மக்களைத் தூரிதப்படுத்தினான். நமது இரட்சகராகிய ஆண்டவர், "கொலை செய்த பின்பு நரகத்திலே தள்ள வல்லமையுள்ள வருக்கு பயப்படுங்கள். ஆம் அவருக்கே பயப்படுங்கள்" லூக்.12:5 என்று கண்டித் திருக்கிறார். பரி.பவுல். "ஆகையால், கர்த்தருக்குப் பயப்படத்தக்கதென்று அறிந்து, மனுஷருக்குப் புத்தி சொல்லு கிறோம்" 2 கொரி.5:11 என்று எழுது கிறார். நாம் உத்தம ஊழியக்காரர்க ளென்றால் பரலோகத்தைக் குறித்துப் பேசுவது போல நரகத்தையும் குறித்துத் தெளிவாகப் பிரசங்கிக்க வேண்டும்.

அன்பில் வேரூன்றிய விசுவாசம்

Faith rooted in Love

Ruth Paxson (1889-1949)

ஒருமுறை நான் ஒரு வான வில்லைக் கண்டேன். அது கடலின்மேல் அதன் இரு முனைகளும் ஊன்றியது போலவும் முழுமையாகவுமிருந்தது. இந்த அழகிய அடையாளத்தின் மூலம் எபே.2:8-ல் கூறப்பட்ட இரட்சிப்பில் கிருபைக்குக் காணப்படும் தொடர்பை ஆவியானவர் எனக்குக் காண்பித்தார். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்.

இரட்சிப்பு என்னும் வில் முழுமையும கிருபையினாலானது. அது ஒருபுறம் தேவனிடமிருந்து புறப்பட்டு மறுபுறம் மனிதனை எட்டுகிறது. தேவகிருபை எப்போதும் பூரணமானது. ஆனால் மனிதனுடைய விசுவாசம் அபூரணமானது. கிருபை ஒரு வழக்க மான ஆத்மீக வாழ்வுக்கானவற்றை கிறிஸ்துவில் அருளக்கூடியது. இந்த இரட்சிப்பின் அருளைப் பெற்றுக் கொள்ள சோதித்துப்பார்க்கும் விசுவாசம் தேவை. ஒவ்வொரு விசுவாசியிலும் கிருபை வல்லமையை விளங்கப் பண்ண விசுவாசம் பரிசோதனையாய் அமை கிறது.

விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் என்று தேவன் சொல்லுகிறார். இயேசுக் கிறிஸ்து சிலவேளைகளில் சீஷரைக் கண்டிப் பதற்கு ஏதுவாயிருந்தது அவர்களுடைய அவிசுவாசம் என்றால் தவறல்ல. அவரது பிரசன்னம், வார்த்தைகள், கிரியைகள் ஆகியவற்றின் நடுவிலும் விசுவாசம் அவர்களில் தூண்டப்படாதது அவரை அதிகமாக விசனப்படுத்தியது.

ஒருமுறை அவர்கள் படகில் இயேசுவுடன் சென்றுகொண்டிருந்த போது பெரிய புயல் ஏற்பட்டது. சீஷர்கள் பயந்து அலறினார்கள். இயேசு நித்திரை செய்து கொண்டிருந்தாலும் அவருடைய சமூகம் அங்கிருந்ததே. கடல் கொந்தளித்தாலும் புயல் கடின மாக மோதினாலும் அவர்கள் ஏன் பயப்பட வேண்டும்? எனவே அவர் களைக் கடிந்து கொண்டார். "அற்ப விசுவாசிகளே ஏன் பயப்படுகிறீர்கள்?" மத்.8:26. பயமும் விசுவாசமும் இணைந்து வாழ முடியாதவை. "அதற்கு அவர் அற்ப விசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி எழுந்து காற்றையும் கடலையும் அதட்டினார். மிகுந்த அமைதல் உண்டாயிற்று."

இன்னொரு முறை ஆண்ட வருடைய கட்டளைப்படியே பேதுரு கடலின் மேல் நடந்தான். காற்று அதிகமாக வீசினபோது அவன் மூழ்கத் தொடங்கினான். 'வா' என்று அழைத்த ஆண்டவர் கடலில் நிற்கும் போது அவன் ஏன் சந்தேகப்பட வேண்டும்? அவருடைய வல்லமையான பாதுகாவல் அவருடைய அழைப்புடன் காணப்படுமல்லவா? சந்தேகமும் விசுவாசமும் இணைந்து வாழமுடியாது. நம்மில் விசுவாசம் இருந்தால் அங்கு சந்தேகம் இருக்க முடியாது. அதுபோல நம்மில் சந்தேகம் இருந்தால் நம்மில் விசுவாசம் இருக்க முடியாது. "உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து, அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார்" மத்.14:31.

ஒருமுறை இயேசு ஏழு அப்பங் களைக் கொண்டு நாலாயிரம பேரை போஷித்தார். இந்த அற்புதம் செய்து விட்டு அவர் கடந்து சென்றுவிட்டார். சீஷர்கள் அக்கரை சேர்ந்தபோது அப்பங் களைக் கொண்டுவர மறந்துவிட்டனர். எனவே அவர்களுக்குள் கவலையும் யோசனையும் வந்துவிட்டது. 7 அப்பங் களையும் சில சிறுமீன்களையும் கொண்டு நாலாயிரம் பேரை போஷித்து 7 கூடைநிறைய மீதி வரப்பண்ணி னதைக் கண்ட சீஷர்கள் ஏன் கவலைப் பட வேண்டும்? மாலைப்பொழுதில் அவர்கள் பன்னிருவருக்கும் போஜனம் கொடுக்க அவரால் கூடாதா? கவலையும் விசுவாசமும் இணைந்திருக்க முடியாது மத்.16:8-10 படிக்க.

பயம், சந்தேகம், கவலை என்ற மூன்று தீமைகளால் ஆண்டவரை நமது வாழ்விலிருந்து வெளியாக்குகிறோம். உடல் ஆரோக்கியம் குன்றுதல், பொரு ளாதார இழப்புகள், அளவுக்கதிகமான பாரங்கள், துன்பப் புயல்கள் மற்றும் எதிரானவை நமக்கு வரும்போது அவரது பிரசன்னத்தை உணராதவர்களும், அவரது வசனத்தை சந்தேகிக்கிறவர்களும் அவரது செயல்களை மறக்கிறவர் களுமாகிவிடுகிறோம்.

ஆனால் இயேசுவைக் குறித்து மிகக் குறைவாகவே அறிந்திருந்த சிலரிடம் காணப்பட்ட விசுவாசம் ஆச்சரியமானதென்று இயேசு தமது மிக இனிய வார்த்தைகளால் மெச்சிப் பேசியிருக்கிறார். நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் வியாதியால் அவதிப் பட்ட போது ஆண்டவரிடம் விண்ணப் பிக்கிறான். ஆண்டவரும் செல்லும்படி வாக்களிக்கிறார். ஆனால் அவன் என்ன சொல்லுகிறான்! "ஒரு வார்த்தை மாத் திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்" மத்.8:8. இந்த விசுவாசம் இயேசுவின் இருத யத்தை மிகவும் சந்தோஷப்படுத்தின படியால், அவர் அவனைக் குறித்து இத்தகைய இனிய வார்த்தைகளைக் கூறினார். "இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காண வில்லை என்று மெய்யாகவே உங்க ளுக்குச் சொல்லுகிறேன்" வச.10.

கிருபையும், அன்பும் விசுவாசத் திற்கும், நம்பிக்கைக்கும் பதில் அளிக்காம லிருப்பதில்லை என்பதை மனித அனுப வமும் வேத வசனமும் தெளிவுபடுத்து கின்றன. உத்தம விசுவாசத்தை அவர் ஒருபோதும் கனம் பண்ணத்தவறிய தில்லை. சிலருக்கு இத்தகைய விசுவாசம் சாத்தியமல்ல என்ற எண்ணமிருக்கலாம். ஆனால் விசுவாசத்தைப் போல மிக எளிமையானது வேறு எதுவுமே இவ் வுலகிலில்லை. அவருடைய வார்த்தை யைப் பிடித்துக்கொண்டு இயேசுவை நோக்கிப் பார்ப்பதுதான் விசுவாசம். அப்படியானால் விசுவாசம் கொள்வது ஏன் எளிதல்ல என்கிறோம்? நாமோ கிறிஸ்துவை பார்ப்பதற்குப் பதிலாக நமது கஷ்டங்களைப் பார்க்கிறோம். அவை நமது கண்களுக்குப் பெரிதாகக் காட்சியளிக்கின்றன. அவைகள் கிறிஸ்து வை நமது பார்வையிலிருந்து மறைத்து விடுகின்றன. விசுவாசம் தன்னில்தானே நம்மை இரட்சிக்கவோ நிலைநிறுத்தவோ வலிமையற்றது. ஆனால் அது அந்த வலிமையையுடைய கிறிஸ்துவோடு நம்மை இணைக்கிறது. விசுவாசம் செயல் படும் இருவழிகளைக் குறித்துக் கீழே சிந்திப்போம்.

விசுவாசம் தேவனுடைய மகாப்பெரிய உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது

ஸ்விட்சர்லாந்திலுள்ள மலைகள் நிறைந்த ஒரு காட்டுப்பாதையில் சென்ற போது ஒரு வித்தியாசமான ஒரு மரத்தைக் கண்டேன். அது செங்குத்தான ஒரு சரிவில் நின்ற ஒரு பைன்மரம். அதன் அடிப்பகுதியில் இருந்த ஒரு கற்பாறை அம்மரத்தின் முக்கிய அடிப்பகுதியை தரைமட்டத்திலிருந்து அதிக உயரத் திற்கு உயர்த்தியிருந்தது. மரம் ஏறக் குறைய அந்தப் பாறையின் உச்சியில் உட்கார்ந்திருப்பது போல் தோன்றியது. ஆனால் அது நேராக 50 அடி உயரத்திற்கு வளர்ந்திருந்தது. இப்படி ஒரு மரம் இந்த நிலையில் நிற்க முடியுமா? முடியும், ஏனெனில் அதன் வேர்கள் அந்தப் பாறையின் மீது படர்ந்து அதைச் சுற்றிலுமுள்ள பூமியில் மிக ஆழமாகச் சென்றிருந்தன. எனவே அந்தப் பாறை கூட அந்த மரத்தை புரட்டவோ, விழத்தள்ளவோ முடியாது.

அந்த மரம் கற்பித்த பாடம் என்ன? துன்பங்கள், மாறானவைகள், பாடுகள், துக்கங்கள், சோதனைகள், பரீட்சைகள், சந்தேகங்கள், ஏமாற்றங்கள் போன்ற எதுவும் நம்மேல் புரண்டு

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

வரலாம். எப்படி சமாதானமாயிருப்பது, பொறுமையாயிருப்பது, இத்தகைய காரியங்களோடு எப்படி வெற்றியோடு வாழலாம்? இவை நம்மை திகிலடையச் செய்யாதா? என்ற கேள்விகள் எழும் பலாம். ஆனால் விசுவாசம் அவைகளுக் கெல்லாம் மேலாகப் பரவி அதன் வேர்களை தேவனுடைய வளமான நிலமாகிய அவரது நித்திய சத்தியங் களுக்குள் இறக்கியிருப்பதால் வெற்றி வாழ்வு நிச்சயம்.

இந்த சத்தியங்களில் ஒருசில வற்றை மட்டும் வேதத்திலிருந்து கற்றுக் கொள்ள முற்படுவோம்.

தேவ அன்பு :

"அன்பில்லாதவன் தேவனை அறியான், தேவன் அன்பாகவே இருக் கிறார்" 1 யோ.4:8. தேவனுடையதான மகத்தான சத்தியங்களில் இதுவும் ஒன்று. இதில் நம் விசுவாசம் வேரூன்றியிருக்க வேண்டும். தேவன் நம்மை மறந்து விட்டாரோ அல்லது நம்மை சீர்திருத்தும் அவரது கரம் கடினமாயிருக்கிறதோ என நமக்குத் தோன்றலாம். அவர் தமது கண் களையும் செவிகளையும் அடைத்துக் கொண்டாரோ என்ற எண்ணம் ஏற்படலாம். நாம் சுமக்கும் பாரம் அல்லது நாம் சுமக்கும் இருதய வேதனையைக் குறித்து அவர் அக்கரையற்றவர் என்ற சிந்தனை ஏற்படலாம். ஆனால் அன்பர் களே, அது அப்படியல்ல, ஏனெனில் தேவன் அன்பாகவே இருக்கிறார். அவரது அன்பு சூரிய ஒளிபோல் நம்மீது பிரகாசிப்பது நிச்சயம். நீங்கள் அதின் கதிர்களால் அனல்பெறுகிறீர்களோ புதுமலர்ச்சி பெறுகிறீர்களோ என்பது தெரியாது.

தேவனுடைய கிருபை போதுமானது :

"அதற்கு அவர் என் கிருபை உனக்குப் போதும், பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார்; ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என் மேல் தங்கும்படி என் பலவீனங்களை குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்" 2 கொரி.12:9.

நமக்கு சோதனைகளும் பரீட்சை களும் வருவதில்லை என்று தேவன் ஒருபோதும் உரைத்ததில்லை. ஆனால் சோதனைகளோடு அதிலிருந்து தப்பிக் கொள்வதற்கான போக்கையும் உண்டாக் குவார் என்று 1 கொரி.10:13-ல் படிக்கி றோம். மேலும் சகிப்பதற்கேற்ற பெலனையும் அவரே தருகிறார். நாம் அதிக பலவீனராயிருக்கும்போது அவரது பெலனும் பூரணமாய் விளங்கும்.

மிகத் தூரமாகப் போனவர்களையும் கிறிஸ்து இரட்சிக்க முடியும் :

"நான் ஒரு அர்ப்பண வாழ்வுக்கு என்னை உட்படுத்த முடியாது என்று நீங்கள் சொல்லலாம், ஏனெனில் நீங்கள் கிறிஸ்தவரல்லாதவர்களின் இல்லத்தில் வாழலாம். உங்களைச் சுற்றிலும் லௌ கீகமயமான களியாட்டுகள் காணப் படலாம். உங்கள் வியாபாரத்தில் பல சோதனைகளும் உண்மைக் கேடுகளு மிருக்கலாம். இத்தகைய சூழலில் அர்ப்பண வாழ்வு சாத்தியமா என்று நீங்கள் கேள்வி எழுப்பலாம். ஆனால் எபி.7:25-ல் சொன்னபடி அவர் முழுவதும் இரட் சிக்கக் கூடியவராயிருக் கிறார். நமது விசுவாசம் அவருக்குள் ஆழமாய்ச் செல்ல வேண்டும். அவர் நம்மைக் கழுகி சுத்தப் படுத்தவும் பாவம் செய்யாமலிருக்கவும் உதவி செய்வார்.

பரிசுத்த பவுலின் வாழ்க்கையில் பட்ட கடினங்கள் 2 கொரி.11:23-27 வசனங்களில் வரிசைப்படுத்தப்பட்டுள் ளன. ஆனால் அவரது விசுவாசம் இந்த சோதனைகளைத் தாண்டி, தேவனு டைய அன்பு, கிருபை, வல்லமை ஆகிய நித்திய சத்தியங்களுக்குள் வேரூன்றி ஆவிக்குரிய வளர்ச்சியைப் பெற ஏதுவா கிறது. பவுலுக்கு உதவி செய்த ஆண்டவர் உங்களுக்கும் உதவி செய்வார்.

விசுவாசம் தேவனுடைய உத்தமத்தின் மீது கணக்கிடப்படுகிறது

நமது விசுவாசம் தடுமாறினாலும் தேவனுடைய உத்தமம் தடுமாறுவ தில்லை. பேதுரு கிறிஸ்துவை மறுதலித் தான். ஆனால் கிறிஸ்துவின் உத்தமம் அவன்மேல் அசையாமலிருந்தது. நமது பரமபிதா அவரது வாக்குகளை மறப்ப தில்லை. அவற்றை நிறைவேற்றத் தவறி தம்மைத்தான் மறுதலிப்பதுமில்லை. "நாம் உண்மையில்லாதவர்களாயிருந் தாலும், அவர் உண்மையுள்ள வராயிருக் கிறார்; அவர் தம்மைதாம் மறுதலிக்க மாட்டார் (2 தீமோ.2:13)

நாம் தோல்வியால் சத்துருவுக்கு விட்டுக்கொடுக்க ஆயத்தமாகலாம், உற்சாகப்படுத்துவாரின்றி நமது பணியை நிறுத்திவிடலாம் அல்லது கலப்பையி லிருந்து கையை எடுத்துவிட்டு பின் வாங்கலாம். ஆனால் கிறிஸ்து குழப்ப மடைவதோ சோர்ந்து போவதோ இல்லை. அவர் நம்பிக்கையிழந்து நின்று விடுபவரல்ல. பிசாசின் வெற்றிக்கு அவர் விட்டுக் கொடுப்பதில்லை. நமக்காக அவர் பொறுப்பை எடுத்தவராய் உத்த மத்தைத் தொடர்ந்து காத்துக் கொள் கிறார்.

"உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்" 1 தெச.5:24.

சுவிட்சர்லாந்தில் இரு வாலிப பிள்ளைகள் ஒரு பனிக்கட்டி ஆறினை கடப்பதை நான் பார்த்தேன். பாதை அடையாளப்படுத்திக் கொடுக்கப்பட வில்லை. அநேக இடைவெளிகள் பனிக் கட்டிகளுக்கிடையில் இருந்தது. அந்தப் பிள்ளைகளுக்குச் சரியான சப்பாத்துகள் இல்லாமலிருந்தது. ஆனால் அவர்கள் பயமின்றி பாதுகாவலுடன் மெதுவாகக் கடந்துவிட்டனர். ஏனெனில் ஆபத்துக் களையும் கடினங்களையும் நன்கு தெரிந்து வழிநடத்திய ஒரு வழிகாட்டி யோடு ஒரு கயிற்றால் பிணைக்கப் பட்டிருந்தனர்.

நமது இவ்வுலக யாத்திரையும் இத்தகையதுதான். ஆபத்துக்களும் கஷ்டங்களும் ஆங்காங்கே உண்டு. ஆனால் நாம் பயப்படத் தேவையில்லை. ஏனெனில் நமது பாதை முழுவதிலும் நம்மைப் பாதுகாவலாகச் செல்லநமது பிதா ஒரு வழிகாட்டியாக ஆண்டவருடன் விசேஷமாக இணைத்திருக்கிறார்.

நமது தேவனின் சர்வ வல்லமை

The Omnipotence of God

Andrew Murray (1828-1917)

"நான் சர்வ வல்லமையுள்ள தேவன்" ஆதி.17:1.

இந்த வார்த்தைகளை கேட்ட ஆபிரகாம் தேவனுக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து பணிந்தான். தேவன் அவனிடம் பேசி அவனுக்குச் செய்யப் போகிறவைகளைக் குறித்த விசுவாசத்தால் அவனுடைய இருதயத் தை நிரப்பினார். அன்பான தேவ பிள்ளையே தேவனுக்கு முன்பாக மிகுந்த தாழ்மையோடு பணிந்த துண்டா? அவரோடு நெருங்கிய உறவின் மூலம் சர்வ வல்லவரின் மேலுள்ள விசுவாசத்தால் நிரப்பப்பட்டிருக்கிறீர் களா? அவர் உங்களில் கிரியை செய்கி றாரா? உங்களில் அவரது பணியை பூரணப்படுத்துவாரா?

சங்கீதங்களை படித்து முற்கால பரிசுத்தவான்கள் தேவனிலும் அவரது வல்லமையிலும் மகிமைப்பட்டார்கள் என்பதை கவனிப்போம்.

"என் பெலனாகிய கர்த்தாவே, உம்மில் அன்புகூருவேன்"

"தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலை (strength) யாயிருக்கிறார்" சங்.73:26.

"கர்த்தர் என் ஜீவனின் பெலனா னவர்" சங்.27:1.

"என் ஆத்துமாவில் பெலன் தந்து என்னை தைரியப்படுத்தினீர்" சங்.138:3.

மேலும் சங்.18:32; 46:1; 68:35; 59:17; 89:17 ஆகிய வசனங்களையும் படித்துப் பாருங்கள். தேவனை சர்வ வல்லவராகவும் உங்கள் பெலனாகவும் ஏற்றுக்கொள்ளுங்கள்.

இரட்சிப்பு தேவனுடைய கிரியை என்றும் மனிதனால் கூடவே கூடாதது என்றும் கிறிஸ்து போதித் திருக்கிறார். "அப்படியானால் யார் இரட் சிக்கப்படக் கூடும்?" என்ற சீடர்களின் கேள்விக்கு "மனுஷரால் இது கூடாதது தான், தேவனால் எல்லாம் கூடும்" மத்.19:25-26. இதை நாம் உறுதியாக விசுவாசிப்போமானால் தேவன் தமது பார்வைக்குப் பிரியமானபடி நம்மில் கிரியை செய்கிறார் என்பதை விசுவா சிக்க தைரியப் படுவோம்.

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியருக்கு எழுதும்போது "விசுவாசிக் கிறவர்களாகிய நம்மிடத்தில் காண் பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்ன

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்க தொடர்ச்சி)

தென்று நீங்கள் அறியும்படிக்கு ....." எபே.1:19 என்று ஜெபிக்கிறார். கொலோசியருக்கு அவர் எழுதும்போது : "..... மகிமையான அவருடைய வல்லமையின் படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும் உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்" கொலோ.1:11 என்று எழுதுகிறார். ஒருவர் தேவனுடைய பலத்த வல்லமை தன்னில் இடைவிடாது செயல்படுகிறது என்று விசுவாசித்தால் அவர் சந்தோஷமாக, "தேவன் என் ஜீவனின் பெலனானவர்" என்று கூற முடியும்.

அனேக கிறிஸ்தவர்கள் தங்கள் பலவீனங்களை குறித்தும் தவறுதல்களைக் குறித்தும் குறிப்பிடுவது ஆச்சரியமல்லவா! அவர்கள் சர்வவல்ல தேவன் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணி நேரமும் அவர்களில் செயல்பட வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள வில்லை. இதுவே விசுவாசத்தின் உத்தம வாழ்வின் இரகசியம்.

"ஆண்டவரே என் முழு பெலத்தோடும் உம்மில் அன்பு கூருவேன்" என்று சொல்லுமட்டும் இளைப்பாற வேண்டாம். தேவன் உங்களை முழுவதுமாக ஆட் கொள்ளட்டும். எல்லா தேவ பிள்ளைகளோடும் சேர்ந்து, "நீரே அவர்கள் பலத்தின் மகிமையாயிருக்கிறீர்" சங்.89:17 என்று கூற முடியும்.

விசுவாசம் தேவனை நோக்கிப் பார்க்கிறது
Faith looks at God
Martyn Lloyd Jones

விசுவாசம் தேவனுடைய உண்மையைப் பற்றிக் கொள்வதால் அது தவறுக்கு வழிநடத்துவதில்லை. விசுவாசம் கடினங்களைப் பார்ப்பதில்லை. விசுவாசம் தன்னையோ விசுவாசத்தில் நிலைத்திருப்பவர்களையோ பார்ப்பதில்லை. அது தேவனை மட்டுமே நோக்குகிறது. அதனுடைய விருப்பமெல்லாம் தேவன் மட்டுமே. எனவே விசுவாசம் தேவனை பற்றி மட்டுமே பேசி தேவனது நற்பண்புகளை உயர்த்திக்காண்பிக்கிறது. ஒரு மனிதனுடைய விசுவாசத்தின் மொத்த பெலன் என்பது அவன் தேவனை குறித்து அறிந்திருக்கும் அறிவின் அளவாகும். அவன் தேவனை நன்கு அறிந்திருப்பதால் அந்த அறிவைச் சார்ந்தே அவன் வாழமுடியும். இத்தகைய மனிதர்களின் ஜெபம் கேட்கப்பட்டு பதிலைப் பெறுவது நிச்சயம்.

ஜெபிக்கிற தேவனுடைய பிள்ளைகளுக்கு ....

"தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்"
ஆதியாகமம் 2 : 18

கர்த்தருக்குச் சித்தமானால் அக்டோபர் 15-ம் தியதி நடை பெறும் மகள் W. சாரா மெலோடி திருமணத்திற்காக தயவாய் ஜெபியுங்கள்.

"இயேசுவும் அவருடைய சீஷரும் அந்தக் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்"
யோவான் 2:2

விபரங்களுக்கு : W. சாமுவேல் பின்னி,
மொபைல் : **94897 40295**

(3-ம் பக்க தொடர்ச்சி)

கேரிக்கு (1761-1834) நடந்தது! செருப்புத் தொழிலாளியாயிருந்த அவர் தனது தொழிலறையில் ஓர் உலகப்படத்தை ஒட்டி வைத்திருந்தார். அடிக்கடி அந்த படத்தின் முன் நின்று கொண்டு, சந்திக்கப்படாத நாடுகளின் மீது விரலை வைத்து ஜெபிப்பாராம். நடந்ததென்ன? மேற்கு வங்காளம் வந்து சேர்ந்தார். இந்திய மொழிகள் பலவற்றில் பாண்டித்தியம் பெற்றார். ஏதோவொரு விதத்தில் விவிலியத்தை 40 இந்திய மொழிகளில் மொழியாக்கம் செய்வதில் ஈடுபாடு கொண்டிருந்தார். நம்பமுடிகிறதா?

2. பலிபீடத்தின் மேலுள்ள அக்கினி
Fire upon the alter / Fire of the alter

i) ..... பலிபீடத்தின் மேலுள்ள **அக்கினி** எரிந்துகொண்டே இருக்க வேண்டும் லேவி. 6:9 b.

ii) பலிபீடத்தின் மேலிருக்கிற **அக்கினி** அவியாமல் எரிந்து கொண்டிருக்க வேண்டும் லேவி.6:12.

iii) பலிபீடத்தின்மேல் **அக்கினி** எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்க வேண்டும்.

3. அந்நிய அக்கினி
Strange Fire

பின்பு ஆரோனின் குமாரராகிய நாதாவும் அபியூவும் தன்தன் தூப கலசத்தை எடுத்து, அவைகளில் அக்கினியையும் அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டு வந்தார்கள் லேவி.10:1.

And Nadah and Abihu, the sons of Aaron, took either of them his conser, and put fire therein, and put incense thereon, and offered strange fire before the LORD, which he commanded them not.

அப்பொழுது அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, அவர்களைப் பட்சித்தது; அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள் யாத்.10:2.

நாதாவும் அபியூவும் கர்த்தருடைய சந்நிதியில் அந்நிய அக்கினியைக் கொண்டு வந்தபோது, செத்துப் போனார்கள் எண்.26:61.

காலஞ்சென்ற சாது டேவிட் சுந்தரமணி (சென்னை போதகர்) அவர்கள், ஆராதனை அவசியம், ஆனால் ஆட்டம் பாட்டம் அவசியமில்லை என்று எழுதியிருந்தார்கள். இதோ, இன்றைய ஆராதனையைக் குறித்து வேறொரு சென்னை போதகர் இவ்வாறு எழுதியிருக்கிறார் :

ஆராதனையிலும் புது டிரெண்டு வந்துகிட்டே இருக்கு. 'ஓ' போடுவது பிரேக் டான்ஸ் முதல் குத்தாட்டம் போடுவது வரை எல்லாம் நம்ம ஆராதனையிலே இப்போதைய லேட்டஸ்டு வரவு.

'ஓ' போடுவது ஓசன்னாவுக்கு சுருக்கம், கைதட்டுவது கடவுளுக்குப் பாராட்டு, குத்தாட்டம் போடுவது தூதர் கூட்டத்தையும் குஷியேத்துவது.

கடவுள் சந்நிதியில் அங்க அசைவும் அபிநயமும் அலங்கோல ஆட்டமும் அருகில் இருப்பவரை திசை திருப்பி இடற பண்ணும். ஓ போடுவதும் ஓலமிடுவதும் அமைதி காக்க வேண்டிய சபையை சந்தைக்கடையாக்கும் துணிகரம்!

இந்தியா சந்திக்கப்படாததற்கு ஒழுங்கற்ற சபைகள், பொருளற்ற ஆராதனைகள், தெளிவற்ற செய்திகள், பொய்யான அனுபவங்கள், வீணான ஆராரோரங்கள், சாட்சியில்லாத ஊழியர்கள், மனந்திரும்பாத மக்களே காரணம்.

* * * * *

4. அழிக்கும் அக்கினி அல்லது பட்சிக்கும் அக்கினி
Consuming Fire

(i) அப்பொழுது கர்த்தர் சோதோமின் மேலும் கொமோராவின் மேலும், கர்த்தராலே வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப் பண்ணி,

அந்த பட்டணங்களையும், அந்தச் சமபூமியனைத்தையும், அந்தப் பட்டணங்களின் எல்லாக்குடிகளையும், பூமியின் பயிரையும் **அழித்துப் போட்டார்** ஆதி.19:24, 25.

(ii) பின்பு, ஜனங்கள் முறையிட்டுக் கொண்டிருந்தார்கள்; அது கர்த்தருடைய செவிகளில் பொல்லாப்பாயிருந்தது; கர்த்தர் அதைக் கேட்டபோது, அவருடைய கோபம் மூண்டது; கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றியெரிந்து, பாளையத்தின் கடைசியிலிருந்த சிலரைப் **பட்சித்தது** எண்.11:1

(iii) அப்பொழுது எலியா, அந்த ஐம்பது பேரின் தலைவனுக்குப் பிரதியுத்தரமாக : நான் தேவனுடைய மனுஷனானால், அக்கினி வானத்திலிருந்து இறங்கி, உன்னையும் உன் ஐம்பது பேரையும் பட்சிக்கக்கடவது என்றான்; உடனே அக்கினி வானத்திலிருந்து இறங்கி, அவனையும் அவன் ஐம்பது பேரையும் **பட்சித்தது.** 2 இராஜா.1:10

4. சோதிக்கும் அக்கினி
Fire of Trial

அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்ற தாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும் 1 பேதுரு 1:7.

நீ தண்ணீர்களைக் கடக்கும் போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினி ஜ்வாலை உன் பேரில் பற்றாது ஏசா.43:2.

சாத்ராக், மேஷாக், ஆபெத் நெகோ என்பவர்களை எரிகிற அக்கினி

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

சூளையிலே போடுவதற்கு அவர்களைக் கட்டும்படி, தன் இராணுவத்தில் பலசாலி களாகிய புருஷருக்குக் கட்டளை யிட்டான் தானியேல் 3:20.

i) . . . . எரிகிற **அக்கினிச்** சூளையின் நடுவிலே போடப்பட்டார்கள் - வசனம் 21.

ii) . . . . **அக்கினி** ஜ்வாலையானது . . . . தூக்கிக்கொண்டு போன புருஷரைக் கொன்று போட்டது - வசனம் 22.

iii) . . . .அந்த மூன்று புருஷரும் கட்டுண்டவர்களாய் எரிகிற **அக்கினிச்** சூளையின் நடுவிலே விழுந்தார்கள் - வசனம் 23

iv) ... மூன்று புருஷரை அல்லவோ கட்டுண்டவர்களாக **அக்கினியிலே** போடுவித்தோம் என்றான் - வசனம் 24

v) .....நாலுபேர் விடுதலையாய் **அக்கினி** யின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன் - வசனம் 25.

vi) அப்பொழுது நேபுகாத் நேச்சார் எரிகிற **அக்கினிச்** சூளையின் வாச லண்டைக்கு வந்து .... நீங்கள் வெளியே வாருங்கள் என்றான் - வசனம் 26.

vii) ..... **அக்கினி** பெலஞ் செய்யா மலும் ..... இருந்ததைக் கண்டார்கள் - வசனம் 27.

6. நித்திய அக்கினி

Everlasting fire

i) ..... நித்திய அக்கினியில் தள்ளப் படுவதைப் பார்க்கிலும் everlasting fire மத்.18:8.

ii) ..... எரிநரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும் (Hell fire) மத்.18:9.

iii) ..... அவியாத அக்கினியுள்ள நரகத்திலே போவதைப் பார்க்கிலும் மாற்கு 9:43.

iv) ..... அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும் மாற்கு 9:44.

v) ..... அவியாத அக்கினியுள்ள நரகத்திலே தள்ளப்படுவதைப் பார்க் கிலும் மாற்கு 9:45.

vi) அப்பொழுது இடதுபக்கத்தில் நிற்ப வர்களைப் பார்த்து அவர் : சபிக்கப் பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக் காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக் கிற நித்திய அக்கினியிலே போங்கள் மத்.25:41.

vii) மேலும் அவர்களை மோசம் போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள். ஜீவ புஸ்தகத் திலே எழுதப்பட்டவனாகக் காணப் படாதவனெவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான் வெளி.20:10, 15. (தொடரும்)

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உதவி : 9489740295 உங்கள் சகோதரன்,
அலுவலகம் : 9543221008 **வெஸ்லி தேவதாசன்**
சமயம் : 10 - 01; 02 - 06 (WESLEY DEVADASON)

அன்பு கூராமல் கொடுக்க முடியும். ஆனால், கொடுக்காமல் அன்பு கூர முடியாது. தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் – யோவான் 3:16

- **கடிதங்கள், மணியாடர்கள்** அனுப்ப வேண்டிய முகவரி
வருகையின் தூதன், நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001
VARUKAYIN THOOTHAN, Newport Street, Nagercoil-629 001.
Mobile : 95432 21008, 9489740295, **e-mail:**varukayinthoothan@hotmail.com
- **காசோலை** ***(Cheque & Draft)***
வெஸ்லி தேவதாசன் என்ற பெயருக்கு மட்டும் அனுப்பும்படி அன்பாய் கேட்கிறேன்.
- **வங்கி** வழியாய் காணிக்கை அனுப்புவோர் (Net Banking) தயவாய் உடனே எங்களுக்கு SMS அனுப்புங்கள், அல்லது அலுவலக செல் நம்பர் 95432 21008 வழியாக தெரிவியுங்கள்.

பத்திரிகை பணி

A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No.: 2131010118439
United Bank of India, Mead Street, Nagercoil IFSC Code : UTBI0NGLP05

வருகையின் தூதன் உபவாச ஊழியம்

A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No.: 370601000002557
I.O.B., Court Road, Nagercoil-1 IFSC Code : IOBA0000063

முன்னேற்றப்பணி

A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No.: 61822200136904
Syndicate Bank, W.C.C. Road, Nagercoil-1 IFSC Code : SYNB0006182

மற்ற பத்திரிகைகள் என்ன எழுதுகின்றன!

ஆன்லைனில் காணிக்கை அனுப்புபவர்கள் கவனத்திற்கு

நீங்கள் இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனின் ஊழியத்திற்கென்று காணிக்கை அனுப்பும் போது எந்த காரியத்திற்காக பணம் அனுப்ப விரும்புகிறீர்களோ, அந்த வங்கிக் கணக்கில் உங்கள் பணத்தை செலுத்தி _____ என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ் அனுப்பும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

பொதுவான காணிக்கை

ஆலய கட்டிட நிதிக்காக

மருத்துவ நிதிக்காக

நன்றி : வளரும் விண்ணரசு

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

தேவ கோபத்தை தாங்கள் ஒரு மன்னிப்புக் கோருவதால் சமாளித்து விடலாம் என்றும் அல்லது அப்படி ஒன்று இருக்கமுடியாது என்றும் கருதுகிற பேர்க் கிறிஸ்தவர்கள் இருப்பது துக்கமானது.

தேவனுக்கு போதுமான **கனத்தைக்** கொடாமலும் அவரது நீதியின் கோபத்தைக் குறித்த தெய்வ **பயமில்லாமலும்** நாமிருந்தால் அவருக்குப் பிரியமாக சேவை நாம் செய்ய முடியாது. அதற்காக அவர் பட்சிக்கிற அக்கினி என்பதை அடிக்கடி மனதில் கொண்டு வர வேண்டும்.

அனேக **கிறிஸ்தவர்கள்** தங்கள் பலவீனங்களை குறித்தும் தவறுதல்களைக் குறித்தும் குறிப்பிடுவது ஆச்சரியமல்லவா! அவர்கள் **சர்வவல்ல தேவன்** ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணி நேரமும் அவர்களில் செயல்பட வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளவில்லை.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason